தினமணி

**பண்ணைப் பள்ளி பயிற்சி நிறைவு விழா**

First Published : 22 Jan 2012 12:34:16 PM IST

பெரம்பலூர், ஜன. 21: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள அனுக்கூர் கிராமத்தில், பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் நிறைவு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த முகாம் நிறைவு விழாவுக்கு தலைமை வகித்த, வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. மாரிமுத்து பேசியது:

பெரம்பலூர் மாவட்ட அட்மா திட்ட இயக்குநர் செ. சிவக்குமார் பரிந்துரையின் பேரில், வேப்பந்தட்டை கோட்டம், அனுக்கூர் கிராமத்தில் மக்காச்சோள சாகுபடி குறித்த அட்மா பண்ணைப் பள்ளி நடைபெற்றது.

இதில், 5 குழுக்களை சேர்ந்த 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு முன் அறிவு சோதனை, விதை நேர்த்தி, மண் மாதிரி, பூச்சி நிர்வாகம், களை நிர்வாகம், நோய் நிர்வாகம், உர மேலாண்மை, நுண்ணூட்ட மேலாண்மை, மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து ஒவ்வொரு வகுப்பிலும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல், இலைவழி நுண்ணூட்டம் அளித்தல் ஆகியவற்றில் செயல் விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.

எனவே, இந்தப் பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள் நவீன முறையில் சாகுபடி செய்து, அதிக மகசூல் பெற வேண்டும் என்றார் அவர்.

இதில், தொழில் நுட்ப வல்லுநர் க. மணிகண்டன், மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ப. விஜயலட்சுமி, வேளாண் அலுவலர் ராஜேந்திரன், உதவி வேளாண் அலுவலர் மாரித்தேவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தானியக் கதிர் அடிக்க சாலையை களமாகப் பயன்படுத்தும் விவசாயிகள்**

நமது நிருபர்

First Published : 22 Jan 2012 12:10:49 PM IST

விருதுநகர், ஜன. 21: விருதுநகர் மாவட்டத்தில், கிராமங்களில் சாலைகளை தானியக் கதிர் அடிக்கும் களமாக விவசாயிகள் பயன்படுத்துவதால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.

மாவட்டத்தில் சீனியாபுரம், நாராயணபுரம், தாதங்குளம், செங்குன்றாபுரம், மூளிப்பட்டி, சின்னப்பநாயக்கன்பட்டி, செங்கோட்டை, எலிங்கநாயக்கன்பட்டி, சமத்துவபுரம், எரிச்சநத்தம், நடையனேரி, புதுப்பட்டி, கொத்தனேரி ஆகிய பகுதிகளிலும், விருதுநகர்-அருப்புக்கோட்டை சாலையில் பாலவனநத்தம், புளியம்பட்டி, நமச்சிவாயபுரம், சிவகாசி சாலையில் வள்ளியூர், குமாரலிங்காபுரம், ஆமத்தூர், குருவப்பநாயக்கன்பட்டி, செவலூர், மத்திசேனை ஆகிய பகுதிகளிலும், நான்குவழிச் சாலையில் சர்வீஸ் சாலைகளில் மருளூத்து, இனாம்ரெட்டிபட்டி, நடுவப்பட்டி, வச்சக்காரப்பட்டி, சத்திரெட்டியப்பட்டி, உசிலம்பட்டி ஆகிய பகுதிகளில் கம்பு, சோளம், குதிரைவாலி, கேப்பை, வரகு, மக்காச்சோளம், பயறு வகைகள் ஆகியவற்றை ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

இவை தற்போது விளைந்த நிலையில் அறுவடை பணிகள் மும்முரமாக நடைபெறுகின்றன. கிராமங்களில் தானியக் கதிர்களைப் பிரித்து எடுப்பதற்கு விவசாயிகளுக்குப் போதிய கள வசதியில்லை. அதனால், விளைந்த கதிர்களை அறுவடை செய்து வந்து நெடுஞ்சாலைகளில் பரப்பி விடுகின்றனர். அவ்வழியில் செல்லும் வாகனங்களில் கதிர்கள் அடிபட்டதும் தானியத்தைப் பிரித்து எடுக்கின்றனர்.

இரும்பு சோளம், சோளம், கம்பு போன்ற கதிர்களில் இருந்து தானியத்தைப் பிரித்து சாலையில் காயவைக்கின்றனர். சில நேரங்களில் இவர்களே வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

இருசக்கர வாகனங்களில் செல்வோர் கம்பு, சோளம் காய வைக்கப்பட்ட பகுதியை கடந்து செல்லும்போது தடுமாறி விழுந்து விபத்துகளை சந்திக்கும் நிலை ஏற்படுகிறது.

இது குறித்து அருப்புக்கோட்டை-ராஜபாளையம் மார்க்கமாகச் செல்லும் அரசு பஸ் டிரைவர் ஆனந்தன் என்பவர் கூறியது:

மாவட்டப் பகுதிகளில் தானியக் கதிர்களை தனியாக அடித்து பிரித்து எடுப்பதற்கு டிராக்டர் வாடகை அதிகம். அதனால், போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகளை தானியக் கதிர்களை அடிப்பதற்கு பயன்படுத்துகின்றனர்.

செங்குன்றாபுரம், பாலவனநத்தம், நடையனேரி, மூளிப்பட்டி விலக்கு ஆகிய பகுதிகளில் மூலிகைச் செடிகளான கிளிநொச்சி, துளசி செடி, வேப்பங்கொளை உள்ளிட்டவற்றை சாலைகளில் உயரமாகப் பரப்பி விடுகிறார்கள்.

இதுபோன்ற செடிகள் வாகனங்களில் சிக்கிவிடுவதால் இறங்கி எடுத்து விட வேண்டியிருக்கிறது. சிலநேரங்களில் டயர்களில் இச்செடிகள் குத்தி பஞ்சராகிவிடும். இதைத் தவிர்க்க கிராமங்களில் தானியக் கதிர்கள் உலர்த்துவதற்கும், கதிரை பிரிப்பதற்கும் தனியாகக் களம் அமைத்துத் தர வேண்டும் என்றார்.

**புயல் பாதித்த விவசாயிகளின் குறைகளை உடனே தீர்க்க வேண்டும்**

First Published : 22 Jan 2012 03:29:41 PM IST

பண்ருட்டி, ஜன. 21: புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறைகளை அரசு உடனடியாக தீர்க்க வேண்டும் என ராஜீவ்காந்தி-வாழப்பாடி ராமமூர்த்தி அறக்கட்டளை தலைவர் வாழப்பாடி ராம.சுகந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

÷புயலால் பாதிக்கப்பட்ட பண்ருட்டி-பணிக்கன்குப்பம், கொஞ்சிக்குப்பம், நெய்வேலி-சேப்பளாநத்தம், பெரியாகுறிச்சி பகுதியை சேர்ந்த 500 பேருக்கு, வாழப்பாடி கே.ராமமூர்த்தியின் 72-வது பிறந்தநாளை முன்னிட்டு, ராஜீவ்காந்தி-வாழப்பாடி கே.ராமமூர்த்தி அறக்கட்டளை சார்பில் நிவாரணம் வழங்கும் விழா பணிக்கன்குப்பத்தில் அண்மையில் நடந்தது.

÷விழாவில் கலந்துகொண்ட ராம.சுகந்தன், புயலால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு அரிசி, புடவை,வேட்டி, நிதி உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார்.

÷பின்னர் செய்தியாளர்களிடம் ராம.சுகந்தன் கூறியது.

÷புயலால் பாதிக்கப்பட்ட நெய்வேலி, முத்தாண்டிக்குப்பம், மருங்கூர், மாளிகம்பட்டு, கொஞ்சிக்குப்பம்,பணிக்கன்குப்பம் பகுதிகலுக்கு சென்று பார்வையிட்டேன். விவசாயிகள், பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

÷இடைக்கால நிவாரணம் அளித்து அரசு நல்லது செய்துள்ளது. மின்சாரம் பல கிராமத்துக்கு வரவில்லை என கூறுகின்றனர். முந்திரி விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ.25 ஆயிரமாக நிவாரணம் உயர்த்தி வழங்க வேண்டும். வங்கியில் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும். கடலூர் மாவட்டத்தை பேரிடர் பாதித்த மாவட்டமாக அறிவித்து வட்டியில்லா கடன் வசதி அளிக்க வேண்டும்.÷சேதமடைந்த முந்திரிகளை அகற்றவும், நிலத்தை சீரமைத்து புதிய கன்றுகளை நட பண வசதி இல்லை என கூறுகின்றனர். எனவே முந்திரி விவசாயிகளுக்கு பாசனத்துக்கு ஆழ்குழாய் கிணறும், 5 வருடத்திற்கு இலவசமாக உரம் உள்ளிட்ட உதவிகளை அரசு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

÷ராஜீவ்காந்தி-வாழப்பாடி கே.ராமமூர்த்தி அறக்கட்டளை சார்பில் தமிழகம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறோம். புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு அதிகளவில் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்றார்.

÷மாவட்ட காங்கிரஸ் செயலர் தங்க.தனசேகர், பொதுச் செயலர் ராஜேந்திரன், துணைத் தலைவர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, விவசாய அணி துணைத் தலைவர் தனசேகரன், பண்ருட்டி வட்டத் துணைத் தலைவர் பார்த்தசாரதி, கம்மாபுரம் வட்டாரத் தலைவர் அமிர்தலிங்கம், பண்ருட்டி தொகுதி தலைவர் நடராஜன், நெய்வேலி தொகுதி துணைத் தலைவர் விநாயகம், சோனியா காந்தி லட்சியப் பேரவை மாவட்டத் தலைவர் கே.சிவகார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## முட்டை விலை ரூ.2.65

First Published : 22 Jan 2012 11:12:05 AM IST

நாமக்கல், ஜன. 21: வடமாநிலங்களில் காய்கறிகளின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் முட்டையின் நுகர்வு குறைந்துள்ளது. இதனால், நாமக்கல் மண்டல முட்டையின் விலை 5 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.2.65-ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கான முடிவு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சனிக்கிழமை எடுக்கப்பட்டது. இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது: வடமாநிலங்களில் காய்கறிகளின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. உருளைக்கிழங்கு, தக்காளி ஆகிய காய்கறிகள் கிலோ ரூ.8 முதல் ரூ.10 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

அதே சமயத்தில், சில்லரை வர்த்தகத்தில் முட்டையின் விலை ரூ.4-க்கு மேல் விற்கப்படுகிறது. விலை அதிகமாக இருப்பதால் முட்டைக்கு பதிலாக காய்கறிகளை மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். இதற்கிடையே வடமாநிலங்களில் விவசாயிகளின் அறுவடை திருவிழாக்கள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இந்தப் பண்டிகைக் காலத்தில் வடமாநில மக்கள் பெரும்பாலும் அசைவ உணவு சாப்பிடுவதைத் தவிர்க்கின்றனர். இதனால், நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தியாகும் முட்டைகள் தேக்கம் அடையத் தொடங்கியுள்ளது. தில்லி, கொல்கத்தா, மால்வா ஆகிய மண்டலங்களிலும் முட்டை விலை சரிவை சந்தித்துள்ளது. தேசிய அளவில் முட்டை விலை குறைந்து வருவதால், முட்டை ஒன்றின் விலையை 5 காசுகள் குறைத்து ரூ.2.65-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் முட்டையின் விலை மேலும் குறையும் என்றனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**பயிரிடும் பரப்பளவு குறைந்ததால்... நாட்டின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைய வாய்ப்பு**

ஜனவரி 23,2012,00:09



புதுடில்லி: நாட்டின் ஒரு சில மாநிலங்களில், போதிய அளவிற்கு மழைப் பொழிவு இல்லாததால், நடப்பு கரீப் பருவத்தில் பயிரிடப்படும் பரப்பு குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத னால், ஒட்டு மொத்த அளவில் எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட ஒரு சில தானிய வகைகளின் உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.ராஜஸ்தான்குறிப்பாக, ராஜஸ்தானில் மழைப் பொழிவு குறைந்ததால், கடுகு மற்றும் வெள்ளை கடுகு உற்பத்தி குறையக்கூடும். ஏனெனில், இம்மாநிலத்தில், கடுகு பயிரிடும் பரப்பளவு, நடப்பு கரீப் பருவத்தில், 26.41 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டு கரீப் பருவத்தில், 32 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது. நாடு தழுவிய அளவிலும் கடுகு பயிரிடப்படும் பரப்பளவு, 71.11 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 69.30 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது.குறிப்பாக, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாரஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும், வடகிழக்கு பருவமழை குறைந்ததால், இம்மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 6.56 லட்சம் ஹெக்டேர் குறைந்துள்ளது.கோதுமைஅதேசமயம், கோதுமை பயிரிடப்படும் பரப்பளவு 2.91 கோடி ஹெக்டேரிலிருந்து, 2.94 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. நாட்டின் பல பாகங்களில், கோதுமை சாகுபடி முழு அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நடப்பு கரீப் பருவத்தில், கோதுமை உற்பத்தி எதிர்பார்த்த அளவிற்கு மேலாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.மத்திய பிரதேசத்தில், கோதுமை சாகுபடி பரப்பளவு கடந்த ஆண்டு கரீப் பருவத்தை விட, 6 லட்சம்

ஹெக்டேர் அதிகரித்துள்ளது. இதே போன்று, ராஜஸ்தான் மாநிலத்திலும், கோதுமை பயிரிடும் பரப்பளவு 3.11 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.பருப்பு வகைகள் சாகுபடி செய்யும் பரப்பளவு, கடந்த கரீப் பருவத்தை விட, நடப்பு கரீப் பருவத்தில் சற்று குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, கடந்த ஆண்டு கரீப் பருவத்தில், பருப்பு வகைகள் சாகுபடி செய்யும் பரப்பளவு, 1.46 கோடி ஹெக்டேராக இருந்தது. இது, தற்போது 1.45 கோடி ஹெக்டேராகக் குறைந்துள்ளது.இதர தானியங்கள்மேலும், இதர தானிய வகைகள் சாகுபடி செய்யும் பரப்பளவும், 9.33 கோடி ஹெக்டேரிலிருந்து, 8.93 கோடி ஹெக்டேராகக் குறைந்துள்ளது. இருப்பினும், மத்திய பிரதேசம், சத்திஸ்கர் குஜராத் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில், இதர தானியங்கள் சாகுபடி செய்யும் பரப்பளவு அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வட மாநிலங்களில், நெல் சாகுபடி செய்யும் பரப்பளவு, கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் சற்று குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

### பனிப்பொழிவால் பூ விலை கடும் உயர்வு: மல்லிகை கிலோ 1,700 ரூபாய்

ஜனவரி 22,2012,15:07



பனிப்பொழிவால் வரத்து குறைந்து, மல்லி உள்ளிட்ட பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.கோயம்பேடு பூ மார்க்கெட்டுக்கு சேலம், ஆந்திர மாநிலம் கடப்பா, திண்டுக்கல், தேன்கனிக்கோட்டை, ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வழக்கமாக தினமும் 15லிருந்து 20 டன் வரும். பனிப்பொழிவு அதிகரித்ததால் உற்பத்தி குறைந்து இப்போது தினமும் ஐந்து அல்லது ஆறு டன் பூக்கள் தான் சராசரியாக வருகின்றன.புயலில் பலியான மல்லி கடலூரில் பயிரிடப்படும் காட்டுமல்லி செடிகளை புயல் பெயர்த்து எறிந்து விட்டதால், அங்கிருந்தும் பூ வரத்து அடியோடு நின்றுவிட்டது. தேவை அதிகமாக இருக்கிறது. வரத்து குறைவாக இருப்பதால் பூக்களின் விலை விண்ணை முட்டுகிறது.நுகர்ந்து பார்க்கலாம்ஒரு சேர் அதாவது 300 கிராம் கொண்ட தரமான மல்லி 500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ மல்லி, 1,700 ரூபாயை தாண்டிவிட்டதால் சில்லரை வியாபாரிகள் மல்லியை நுகர்ந்து பார்ப்பதற்கே தயங்குகின்றனர். அந்த அளவுக்கு

விலை கொடுத்து சில்லரையில் விலை வைக்க முடியாது என்று கூறி நடையை கட்டிவிடுகின்றனர். சில வியாபாரிகள் மட்டும் வாங்கி செல்கின்றனர்.ஜாதி மல்லி ஒரு சேர் 250 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. காட்டு மல்லி சேர் 180லிருந்து 200 வரை விற்கப்படுகிறது. பட்டுரோஸ் விலையில் சற்று இறக்கம் காணப்படுகிறது. 100 கிராம் எடையுள்ள கனகாம்பரம் 60 ரூபாய்க்கு விற்றது. சாமந்தி அரை கிலோ கொண்ட ஒரு தட்டு 100 ரூபாயை தொட்டு விட்டது. சாதாரண நாட்களில் இது 10 முதல் 20 ரூபாய்க்கு விற்பனையாகும்.அரளியின் அரசாட்சி பத்து ரூபாய்க்கு விற்கப்பட்ட அரளி பாக்கெட் 20 ரூபாயை தாண்டிவிட்டது. சில்லரை வியாபாரிகள் வியாபாரம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இன்றியமையாத தேவைக்கு மட்டுமே பூக்களை வாங்கி செல்கின்றனர்.

கொள்முதல் விலை உயரவில்லைரூபன் என்ற வியாபாரி கூறுகையில், ""அடக்க விலைக்கு கொடுத்தால் போதும் என்ற நிலையில் வியாபாரம் செய்து வருகிறோம். விலை ஏற்றம் கண்டு மக்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்," என்றார். தெருமுனையில் பூ விற்கும் செவ்வந்தி கூறுகையில், ""விலை ஏற்றம் ஒருபுறம் இருந்தாலும் எடையும் சரிவர இருப்பதில்லை. 500 ரூபாய்க்கு மல்லி வாங்கி முழம் 30 ரூபாய்க்கு விற்றால் தான் கட்டுபடியாகும். அந்த விலைக்கு மக்கள் வாங்குவார்களா என, சந்தேகமாக இருக்கிறது," என்றார்.பெரியபாளையத்தை சேர்ந்த மல்லிகை விவசாயி நடராஜன் கூறுகையில், ""உரம், இடுபொருள், பூச்சுக்கொல்லி மருந்து, ஆள் கூலி எல்லாம் உயர்ந்து விட்டது. பூக்களின் கொள்முதல் விலை தான் உயரவில்லை. முன்பண பிடித்தம், போக்குவரத்து செலவு உள்ளிட்ட செலவுகளை கழித்து பார்த்தால், விவசாயம் செய்வதா அல்லது நிலத்தை விற்றுவிட்டு வேறு வேலைக்கு செல்லலாமா என்று எண்ணத் தோன்றுகிறது," என்றார்.உள்ளூர் பூ வரத்து குறைவுதிருவள்ளூர் மாவட்டத்தில், பெரும்பாலான கிராமங்களில் மல்லி சாகுபடி நடக்கிறது. பனிப்பொழிவு காரணமாக உற்பத்தி குறைந்து விட்டதால் அத்திமேடு, பெரியபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வர வேண்டிய பூக்களின் வரத்தும் குறைந்துள்ளது.

### புயலால் பாதித்த விவசாயிகளுக்கு நிவாரணம்

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,01:36 IST

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் ஞானவினாயகர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது."தானே' புயலால் காட்டுமன்னார்கோவில் பகுதியில் பயிர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டது. தற்போது நிவாரணம் வழங்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. ஞானவிநாயகர் தொடக்க வேளாண்மை

கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட பகுதி விவசாயிகளுக்கு முருகுமாறன் எம்.எல்.ஏ., குமராட்சி ஒன்றிய சேர்மன் பாண்டியன் ஆகியோர் நிவாரணம் வழங்கினர்.கூட்டுறவு விரிவாக்க அலுவலர் வாசுதேவன், மேற்பார்வையாளர் தனஞ்செயன் உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,04:36 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் வரும் 27ம் தேதி விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடக்கிறது.கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை:
கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ம் தேதி காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகிக்கிறார்.கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**நெல் அறுவடை இயந்திரம்விற்பனை கிளை துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2012,03:17 IST

கருத்தை பதிவு செய்ய

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அடுத்த பாய்ச்சல் கிராமத்தில் நெல் அறுவடை இயந்திர விற்பனை கிளை அலுவலகம் திறக்கப்பட்டது. விழாவுக்கு, மாவட்ட ஊராட்சி தலைவர் நைனாக்கண்ணு தலைமை வகித்தார். செங்கம் ஒன்றியக்குழு தலைவர் கணேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அமுதா அருணாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஜெயலட்சுமி ஏஜென்ஸி சுரேஷ் அனைவரையும் வரவேற்றார். மேனேஜிங் பார்ட்னர் ஏ.பி.ஜே.குணசேகரன் பேசுகையில்,""அதிநவீன தொழில் நுட்பத்தில், ஜெர்மன் நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த இயந்திரம், விவசாய பணிகளில் பெரும் பங்கு வகிக்கிறது. மேலும், கிலாஸ் வகை தயாரிப்பு நெல் அறுவடை இயந்திரங்கள் மட்டுமே ரீசேல் செய்ய முடியும். பழைய வண்டிகளை வாங்கிக் கொண்டு புதிய வண்டிகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம்," என்றார்.

தொடர்ந்து, விவசாயிகளுக்கு இலவசமாக நெல் நாற்றுகளை நடவு செய்தும், அறுவடை செய்தும், வைக்கோல்களை மட்டும் எங்கள் நிறுவனத்துக்கு வழங்கினால் போதும் என, விழாவில் அறிவிக்கப்பட்டது. மாவட்ட ஊராட்சி தலைவர் நைனாக்கண்ணு முதல் விற்பனையை துவக்கி

வைக்க, போளூர், அத்திமூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி சின்னக்குழந்தை பெற்றுக் கொண்டார்.விழாவில், நிர்வாக இயக்குனரான, முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் அருணாசலம், கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி தலைவர் மணி, விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள், பொதுமக்கள், ஆபரேட்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.மேலாளர் பாபு நன்றி கூறினார்.

## சொட்டு நீர் பாசன மானியம் பெறுவதில் சிக்கல்

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2012,23:49 IST

கருத்தை பதிவு செய்ய

அன்னூர் : "சொட்டு நீர் பாசன மானியத்துக்காக சான்றுகள் பெற வாரக்கணக்கில் பல அலுவலகங்களுக்கு அலைய வேண்டி உள்ளது' என, விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். கடந்த ஜூன் மாதம் வரை சொட்டு நீர் பாசனம் அமைக்க, அரசு 60 சதவீத மானியம் வழங்கி வந்தது. சிறு, குறு விவசாயிகளுக்கான இந்த மானியம் 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள், வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. இதற்கான சான்றுகள் பெற, பல அலுவலகங்களுக்கு, பல வாரங்கள் அலைய வேண்டி உள்ளது என புகார் எழுந்துள்ளது.

வடக்கலூர் மற்றும் நாரணாபுரம் விவசாயிகள் கூறியதாவது: தண்ணீர் மற்றும் ஆள் பற்றாக்குறையை சமாளிக்க, சொட்டு நீர் பாசனம் மிகவும் உதவியாக உள்ளது. 100 சதவீத மானியத்தில், சொட்டு நீர் பாசனம் அமைக்க, சிட்டா, அடங்கல், நில வரைபடம், சிறு, குறு விவசாயி என்பதற்கான சான்று, மண் ஆய்வு அறிக்கை, நீர் ஆய்வு அறிக்கை, சொட்டு நீர் அமைக்க ஆகும் செலவு பட்டியல், சாகுபடி சான்று, வில்லங்க சான்று ஆகிய 10 சான்றுகள் பெற வேண்டியுள்ளது.

மண் ஆய்வு மற்றும் நீர் ஆய்வு அறிக்கை பெற கோவையிலுள்ள வேளாண் பரிசோதனை நிலையத்திற்கு இரண்டு முறை செல்ல வேண்டும். சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றை இதுநாள் வரை கிராம நிர்வாக அலுவலரே வழங்கி வந்தார். அந்த சான்றை, தாசில்தாரிடம் பெற்று வர வேண்டும் என்று புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக, கோவை வடக்கு தாலுகா அலுவலகம் சென்று விண்ணப்பித்தால் 10 நாள் கழித்து, தேதி குறிப்பிட்டு டோக்கன் தருகின்றனர். அந்த நாளில் சென்றாலும், அதன்பின் இரண்டு நாள் கழித்தே சான்று கிடைக்கிறது. வில்லங்க சான்று பெற சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மூன்று நாட்கள் செல்லவேண்டி உள்ளது. இந்த சான்றுகளுக்காக, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், அன்னூரிலுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், கோவையிலுள்ள தாலுகா அலுவலகம், மண்

பரிசோதனை நிலையம், சொட்டு நீர் கம்பெனி ஆகிய இடங்களுக்கு பல வாரங்கள் அலைய வேண்டி உள்ளது. இந்த அலைச்சலுக்கு பயந்து பல விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்திற்கு விண்ணப்பிக்கவில்லை. எனவே, அரசு சொட்டு நீர் பாசன மானியம் பெற விதித்துள்ள விதிமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**காலநிலையில் அசாதாரண மாற்றம்: தேயிலை சாகுபடி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,01:30 IST

கருத்தை பதிவு செய்ய

குன்னூர் : குன்னூர் நகரில் வழக்கத்துக்கும் மாறாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. காலநிலையில் மாற்றம் ஏற்பட்டதால், தேயிலை சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நீலகிரியில் ஆண்டு தோறும் நவம்பர், டிசம்பர் மாதத்தில் பெய்யும் பனிப்பொழிவு ஜனவரி துவக்கத்தில் இயல்பு நிலைக்கு திரும்பும். இந்த ஆண்டு ஜனவரி மாதம் முடியும் நிலையில், பனியின் தாக்கம் குறையவில்லை. குறிப்பாக, மிதமான காலநிலைக்கு பெயர் போன குன்னூர் நகரம் இந்த ஆண்டு அசாதாரண சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது.

குன்னூரை சுற்றியுள்ள மஞ்சூர், கோரகுந்தா, கொலக்கம்பை, தூதூர்மட்டம் உட்பட தேயிலை தோட்டங்கள் நிறைந்த கிராமப் பகுதிகளில் பனிப்பொழிவு அதிகமாக உள்ளன. கான்கிரீட் காடுகளாக மாறிய, குடியிருப்புகள் நிறைந்துள்ள குன்னூர் நகரில் உடலை உறைய வைக்கும் பனிப்பொழிவு தொடர்கிறது.

கடந்தாண்டு குன்னூர் நகரில் குறைந்தபட்ச வெப்ப நிலை 10 - 13 டிகிரி செல்சியஸ் வரை இருந்தது. இந்தாண்டு குறைந்தபட்ச வெப்ப நிலை 6-9 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது. பனிக்காலம் முடியும் தருவாயில் நகரில், பகல் நேரங்களில் அதிகபட்சம் 26-29 டிகிரி செல்சியஸ் வெயில் சுடுகிறது. மாலை துவங்கும் நேரத்திலேயே பனிப்பொழிவும் துவங்கிவிடுகிறது. இரவில் 9 டிகிரி செல்சியஸ் குளிர் நடுங்க வைக்கிறது. இந்த அசாதாரண காலநிலை மாற்றம் நகர வாசிகளுக்கு புதிய அனுபவம். மைனஸ் டிகிரி குளிரை இதுவரை எதிர்கொள்ளாத குந்தா, கோர குந்தா உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் இந்த ஆண்டு மைனஸ் டிகிரி குளிர் எட்டி பார்த்துள்ளது. இந்தப்பனிப்பொழிவு தேயிலை தோட்ட சாகுபடியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் ஹெக்டே கூறுகையில், " நவம்பர், டிசம்பர் பனிக் காலத்தில் சாகுபடி செய்யப்படும் பசுந்தேயிலை மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளின் தரம் நன்றாக இருக்கும்; பனிக்காலம் முடிய வேண்டிய தருனத்தில் பனிப்பொழிவு தொடர்வதால், தேயிலையின் தரம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது,' என்றார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலர் ஆசிரியர் ராஜூ கூறுகையில், "30 ஆண்டு காலநிலை மாற்றத்தை கணக்கிட்டு தான் விஞ்ஞானிகள் காலநிலை மாற்றம் குறித்து துல்லியமான தகவலை தெரிவிக்கின்றனர். கடந்த 1947ல் ஊட்டியில் நிலவிய காலநிலை மாற்றத்துடன், தற்போதைய காலநிலையை ஒப்பிடுகையில் 5 டிகிரி வெப்ப நிலை உயர்ந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. குன்னூரில் பனிக்காலம் முடிய வேண்டிய தருவாயிலும் பனிப்பொழிவு தொடர்வதும், பகல் நேரத்தில் கடும் வெய்யில், இரவில் அதற்கு இணையான குளிர், பனியும் நிலவுவதற்கு புவி வெப்பமாயதலின் விளைவே காரணம்,' என்றார்.

**தேயிலை செடிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,01:31 IST

கோத்தகிரி :நீலகிரி மாவட்டத்தில் நிலவும் பனிப்பொழிவால், தேயிலை செடிகள் கருகி வருகின்றன.

சில நாட்களாக பனிப்பொழிவின் தாக்கம் அதிகரித்து வருகிறது; கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்கள் கருகி வருகின்றன. இப்பகுதியில் தேயிலை விவசாயமே பிரதானமாக உள்ளதால், பனிப்பொழிவால், விவசாயிகள் இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர்.

வரும் நாட்களில் வெயிலின் தாக்கமும், பனிப்பொழிவும் அதிகரிக்கக் கூடும் என்பதால், பசுந்தேயிலை மகசூல் வெகுவாக குறைய வாய்ப்புள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**வங்கிக் கடனை ரத்து செய்ய விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,01:31 IST

கோத்தகிரி : நீலகிரி மாவட்ட விவசாயிகள், வங்கிகள் மூலம் பெற்ற கடன்களை ரத்து செய்யவேண்டும் என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்க தலைவர் தும்பூர் போஜன், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு:

நீலகிரியில் பனிப்பொழிவு மற்றும் விலை வீழ்ச்சியால், தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இச்சூழலில் வங்கிகள் மூலம் பெறப்பட்ட விவசாய கடன்களை வசூல் செய்ய, வங்கிகள் கெடுபிடி செய்து வருகிறது. இதை தடுப்பதுடன், விவசாயிகள் நலன்கருதி

தமிழக அரசு கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கிய கடனை ரத்து செய்யவேண்டும். கடந்த காலங்களில் வழங்கியது போல, பசுந்தேயிலைக்கு மானியம் வழங்குவதுடன், காய்கறி விவசாயத்துக்கு தேவையான இடுப்பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கும் மானியம் வழங்கவேண்டும்.
இவ்வாறு, போஜன் கூறியுள்ளார்.

**சம்பாவுக்கு பின் உளுந்து பயிரிடுங்கள்விவசாயிகளுக்கு அதிகாரி "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,05:25 IST

புதுக்கோட்டை: புதுக்கோட் டை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்கு பின் அந்த நிலங்களில் உளுந்து சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் அறிவுரை வழங்கியுள்ளனர்.வேளாண் இணை இயக்குனர் எம்பெருமாள் வெளியிட்ட அறிக்Ø க: புதுக்கோட்டை மாவட்டத்தி ல் இந்தாண்டு சம்பா பருவத்தில் 94 ஆயிரத்து 732 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, 5,081 ஹெக்டேரில் சிறுதானியங்கள், 5,597 ஹெக்டேரில் பயறுவகை பயிர்கள், 5,649 ஹெக்டேரில் க ரும்பு, 12 ஆயிரத்து 718 ஹெக்÷ டரில் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இதர பயிர்களை விட பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தண்ணீரும் குறைந்த அளவு போதுமானது.பயறுவகைகளுக்கு நுகர்வோர்கள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளதால் இவற்றின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, உளுந்து, தட்டைப்பயிறு, பாசிப்பயிறு, துவரை போன்ற பயறுவகைப் பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் அனைவரும் முன்வரவேண்டும்.

மாவட்டம் முழுவதும் தற்போது சம்பா நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில் ஈரப்பதத்தை பயன்படுத்தி பயறுவகைப் பயிர்கள் குறிப்பாக உளுந்து சாகுபடியை விவசாயிகள் துவக்கலாம். இவை மண் வளத்தை காப்பதோடு, குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான தழைஉரமாகவும் அமையும். பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு தேவையான சான்றுபெற்ற விதைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் இவற்றை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் தண்ணீர் தேவையை குறைத்து வேளாண் விளை பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.நுண்ணீர் பாசனம் அமைக்க முன்வரும் சிறு மற்றும் குறு வி வசாயிகளுக்கு 100 சதவீதம் அதாவது முழு தொகை மானியமாக வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு செலவுத் தொகையில் 75 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இந்தாண்டு

மாவட்டம் முழுவதும் 200 ஹெக்டேரில் நு ண்ணீர் பாசனம் அமைக்க இல க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நெல் மட்டுமின்றி கரும்பு உள்ளிட்ட இதர பயிர்களும் இத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யலாம். தங்கள் விளை நிலங்களில் நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தொடர்புடைய வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்புகொள்ளலாம்.இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**சம்பாவுக்கு பின் உளுந்து பயிரிடுங்கள்விவசாயிகளுக்கு அதிகாரி "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,05:25 IST

கருத்தை பதிவு செய்ய

புதுக்கோட்டை: புதுக்கோட் டை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்கு பின் அந்த நிலங்களில் உளுந்து சாகுபடி செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் அறிவுரை வழங்கியுள்ளனர்.வேளாண் இணை இயக்குனர் எம்பெருமாள் வெளியிட்ட அறிக்ø க: புதுக்கோட்டை மாவட்டத்தி ல் இந்தாண்டு சம்பா பருவத்தில் 94 ஆயிரத்து 732 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, 5,081 ஹெக்டேரில் சிறுதானியங்கள், 5,597 ஹெக்டேரில் பயறுவகை பயிர்கள், 5,649 ஹெக்டேரில் க ரும்பு, 12 ஆயிரத்து 718 ஹெக்÷ டரில் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இதர பயிர்களை விட பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தண்ணீரும் குறைந்த அளவு போதுமானது.பயறுவகைகளுக்கு நுகர்வோர்கள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளதால் இவற்றின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, உளுந்து, தட்டைப்பயிறு, பாசிப்பயிறு, துவரை போன்ற பயறுவகைப் பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் அனைவரும் முன்வரவேண்டும்.

மாவட்டம் முழுவதும் தற்போது சம்பா நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில் ஈரப்பதத்தை பயன்படுத்தி பயறுவகைப் பயிர்கள் குறிப்பாக உளுந்து சாகுபடியை விவசாயிகள் துவக்கலாம். இவை மண் வளத்தை காப்பதோடு, குறுவை நெல் சாகுபடிக்கு தேவையான தழைஉரமாகவும் அமையும். பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு தேவையான சான்றுபெற்ற விதைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் இவற்றை விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் தண்ணீர் தேவையை குறைத்து வேளாண் விளை பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.நுண்ணீர் பாசனம் அமைக்க முன்வரும் சிறு மற்றும் குறு வி வசாயிகளுக்கு 100 சதவீதம் அதாவது முழு தொகை மானியமாக வழங்கப்படும். இதர

விவசாயிகளுக்கு செலவுத் தொகையில் 75 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இந்தாண்டு மாவட்டம் முழுவதும் 200 ஹெக்டேரில் நு ண்ணீர் பாசனம் அமைக்க இல க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நெல் மட்டுமின்றி கரும்பு உள்ளிட்ட இதர பயிர்களும் இத்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யலாம். தங்கள் விளை நிலங்களில் நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தொடர்புடைய வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்புகொள்ளலாம்.இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**ஒரு ஏக்கரில் ரூ. 2 லட்சம் வருமானம் : மூங்கில் சாகுபடி கருத்தரங்கில் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 23,2012,02:08 IST

மதுரை : "ஓராண்டில் ஒரு ஏக்கரில் மூங்கில் சாகுபடி செய்து ரூ. 2 லட்சம் வருமானம் பெறலாம்" என, மூங்கில் சாகுபடி கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. மதுரையில் தோட்டக்கலைத் துறை சார்பில் மூங்கில் சாகுபடி கருத்தரங்கு நடந்தது. துணை இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். கலெக்டர் சகாயம் துவக்கி வைத்து பேசியதாவது:
விவசாயிகள் நெல், கரும்பு சாகுபடி செய்வது போல, மூங்கிலையும் சாகுபடி செய்ய வேண்டும். விவசாயிகள் பாரம்பரிய விவசாய முறைகளை கைவிட்டு, மாற்று விவசாயத்தை சிந்திக்க வேண்டும். மதுரையில் இந்த ஆண்டு 25 எக்டேர் நிலத்தில் மூங்கில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் விளைபொருளை நகரத்தில் உள்ள வணிகர்களுக்கு குறைந்த விலைக்கு விற்பதைவிட, நேரடியாக மதிப்புக் கூட்டு பொருளாக விற்றால் பலமடங்கு லாபம் கிடைக்கும். இதற்கு "நபார்டு' மூலம் உதவ நாங்கள் தயாராக உள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.
முன்னோடி விவசாயி பாலசுப்ரமணியன் பேசியதாவது: புல்வகையை சேர்ந்த மூங்கில், 47 சதவீதம் கார்பன்டை ஆக்சைடை பெற்று, 35 சதவீத ஆக்சிஜனை வெளியிட்டு, சுற்றுச் சூழலை பாதுகாக்கிறது. ஒரு ஏக்கரில் 30 டன்வரை சருகுகளை உதிர்ப்பதால், அவை மக்கி இயற்கை உரமாக மாறி மண்வளம் பெருகுகிறது. ஒரு ஏக்கரில் 2 ஆயிரம் மூங்கில் சாகுபடி செய்தால் ஆண்டுக்கு ரூ. 2 லட்சம் கிடைக்கும். பவர் பிளான்ட், கைவினை பொருள், காகிதம், கட்டுமான வேலைக்கு மூங்கில் தேவை. மூங்கில் குருத்தில் இருந்து ஊறுகாய், பொரியல், கேசரி, மிட்டாய், அல்வா, இட்லி பொடி தயாரிக்கலாம். இதன் தேவை அதிகம் என்பதால் பிறமாநிலத்தில் இருந்து வாங்குகின்றனர். நாமே பயிரிட்டால் நல்ல வருமானம் பெறலாம். இதுதொடர்பாக 94864 08384 என்ற எண்ணில் விபரம் பெறலாம், என்றார்.

**நரிக்குடி பகுதியில் தேவை நெல் கொள்முதல் மையம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 22,2012,21:23 IST

நரிக்குடி : நரிக்குடி பகுதிகளில் நெல் கொள்முதல் மையம் அமைக்க, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். நரிக்குடி ஒன்றியத்தில் 6 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிட்டுள்ளனர். தற்போது அறுவடை துவங்கியதால், விளை பொருட்களை விற்க திருச்சுழி, அருப்புக்கோட்டை, திருப்புவனம், மானாமதுரை, மதுரை உள்ளிட்ட நகரங்களுக்கு கொண்டு செல்கின்றனர்.
இதை குறைந்த விலைக்கு வாங்க வியாபாரிகள் நிர்பந்தம் செய்கின்றனர். விவசாயிகளும் வேறு வழியில்லாமல் விற்கின்றனர். லோடு வேன் வாடகைக்கு கூட பணம் கிடைக்காமல் திரும்புகின்றனர். வட்டிக்கு பணம் வாங்கி, நகைகளை அடகு வைத்து,விவசாயம் செய்த விவசாயிகள் பாதிக்கின்றனர். இதை கருத்தில் கொண்டு ஒரு ஆண்டுக்கு முன், மறையூர் மற்றும் நாலூரில் நெல் கொள்முதல் மையம் ஏற்படுத்தப்பட்டது.
விவசாயிகளும் சிரமமின்றி விற்றனர். தற்பொது நெல் கொள்முதல் மையம் செயல்பாட்டில் இல்லை. இப்பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில், சாலைஇலுப்பைகுளம், நாலூர், மறையூர், உலக்குடி, மறையூர் உள்ளிட்ட கிராமங்களில், நெல் கொள்முதல் மையம் அமைக்க வேண்டும்.
கிருதுமால் நீர்பாசன சங்கத்தலைவர் செல்வம்,"" ஒரு மூடைநெல் வியாபாரிகளால் 550 லிருந்து 650 ரூபாய் வரை நிர்ணயம் செய்கின்றனர். விவசாயிகள் நஷ்டமடைகின்றனர். கொள்முதல் மையம் அமைத்தால் மூடைக்கு 800 ரூபாய் வரை கிடைக்கும்,"என்றார்.